# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

**2018**ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் **26**ம் நாள் காலை **11.00** மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 26.09.2018 | **1)** தமிழக அரசால் **01.01.2019** முதல் ஒரு முறை மட்டும் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களை அரசாணை (நிலை எண் **84** நாள் **25.06.2018**ன் படி தடை செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை கழிவு விதி **2016**ன் படி பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் கவர்களை சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் திரும்ப பெறுவதற்கு தெரிவிக்கப் பட்டுள்ளது.<br>மேற்படி அரசு விதிமுறைகளை நடைமுறை படுத்தவேண்டியது உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பு ஆகும். எனவே தூத்துக்குடி மாநகராட்சி ஒரு முறை மட்டும் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகத்தை கட்டுப்படுத்தும் பொருட்களின் பிளாஸ்டிக் கவர்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு திருப்பி அனுப்பி அதன் மூலம் சுற்று சூழலுக்கு உகந்த வகையில் அப்புறப்படுத்த செய்யவும் வருங்காலங்களில் இத்தகைய பொருட்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்த கவர்களில் பொதித்து வழங்கச் செய்யும் பொருட்டு கீழ்க்கண்ட விதிமுறைகளுக்குட்பட்ட பரிசுப் போட்டி நடத்தவும் அதன் மூலம் பயன்படுத்தப்பட்ட கவர்களை சேகரிக்க கூப்பன் அச்சிடுதல் மற்றும் பரிசுத் தொகை வகைக்கு ஆகும் உத்தேசச் செலவுத் தொகை ரூ **2.00** இலட்சம் அனுமதிக்க வேண்டி மாமன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.<br>**போட்டிக்கான விதிமுறைகள்**<br>• பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்க்கும் பொருட்டு பொதுமக்களுக்கு இது ஒரு விழிப்புணர்வுத் திட்டம்<br>• பொதுமக்கள் தாங்கள் பயன்படுத்தும் உணவு மற்றும் இதர பொருள்களில் பிளாஸ்டிக் பொதிந்த தாள்களை சேகரித்து கொடுக்கும் **10** எண்ணத்திற்கு ஒரு பரிசு கூப்பன் வீதம் வழங்கப்படும்.<br>• இதர பிளாஸ்டிக் பாலித்தின் பைகள் பெறப்பட மாட்டாது.<br>• பரிசு கூப்பனின் மறைவாக மறைந்துள்ள எண்ணினை தேய்த்து அறிந்து அதற்குரிய பரிசு தாங்கள் வாங்கும் பொருட்களின் தொகையில் குறைத்துக்கொள்ளலாம்.<br>• மிகவும் பழுதடைந்த அல்லது குப்பைகளில் சேகரிக்கப்பட்ட பொதி தாள்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது, | **154)** அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | • பொதி தாள்களின் அளவு முக்கியமல்ல மற்றும் வயது வரம்பு கிடையாது.<br>**பரிசு விபரம்** | |

| விபரம் | தொகை வீதம் | நபர்கள் | மொத்த தொகை |
|---|---|---|---|
| 1 ஸ்டார்க்கு | 1 ரூபாய் | 16150 | 16150 |
| 2 ஸ்டார்க்கு | 5 ரூபாய் | 2500 | 12500 |
| 5 ஸ்டார்க்கு | 20 ரூபாய் | 500 | 10000 |
| $ க்கு | 100ரூபாய் | 50 | 5000 |
| $$க்கு | 500ரூபாய் | 50 | 25000 |

| | | |
|---|---|---|
| | 2) இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மூலம் நடைபெறும் டெங்கு கொசு ஒழிப்பு பணி மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பணிகளுக்கு சுய உதவிக்குழுக்கள் மூலம் தற்காலிகமாக DBC பணியாளர்கள் துப்புரவு பணியாளர்கள், வாகன ஓட்டுனர்கள், கணினி விபரப் பதிவாளர் மற்றும் தூய்மைக் காவலர்கள் பணியமர்த்தப்பட்டு மேற்படி பணியாளர்களுக்கு மாத ஊதியம் சுய உதவிக்குழு வாரியாக வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டு மாத ஊதியம் பெற்று வருகின்றார்கள். மேற்படி பணியாளர்களுக்கான ஊதியத்தினை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற வாழ்வாதார மையத்தின் (CLC) மூலமாக மாநகராட்சியில் பணிபுரியும் சுய உதவிக்குழுக்களுக்கு மட்டும் வழங்க திட்ட இயக்குநர் , மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, தூத்துக்குடி அவர்களின் கடிதம் ந.க.எண். A4(NULM)/1237/2017 நாள் **07.08.2018**ன் படி அனுமதி பெறப்பட்டு மேற்படி பணியாளர்களுக்கு சுய உதவிக்குழு மூலம் மேற்படி CLC நிறுவனத்தின் மூலம் ஊதியம் வழங்க தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் ஒப்பந்தப்பத்திரம் பெறப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு CLC நிறுவனம் மூலம் மூன்றாண்டுகளுக்கு மேற்கொள்ள அனுமதியும் அதற்காகும் செலவுத்தொகையினை பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்**2/3663/2018** | 155) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | **3)** தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட முத்துநகர் கடற்கரை பூங்காவினை மாநகராட்சி பராமரிப்பதற்கு மாவட்ட நிர்வாகத்தினை கேட்டுக்கொண்டதனை அடுத்து மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் வி**7/3623/2018** நாள் **27.7.2018**ல் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மாநகராட்சி நிர்வாகத்தால் இக்கடற்கரை பூங்காவினை பராமரிப்பு செய்து கொள்ள ஒப்படைப்பதற்கு இசைவு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>**1)** மேற்படி முத்துநகர் கடற்கரை பூங்கா தொடர்பான குத்தகை உரிமம் மாவட்ட நிர்வாகத்தின் கீழ் இருக்கும் எனவும் அதே வேளையில் இதன் மூலம் கிடைக்கப்பெறும் வருவாயில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாநகராட்சிக்கு இடையே ஏற்படுத்துப்படும் ஒருமித்த நிபந்தனைகளின் பேரில் ஏற்றுகொள்ளப்படும். | **156)** அலுவலகக் குறிப்பு **1** மற்றும் **2** அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | 2) முத்து நகர் பூங்கா என மாநகராட்சி நிர்வாகத்தால் பெயர் பலகை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>3) மின் இணைப்பு எண்கள் 1031, 1071, 1087, 1088 மற்றும் 1089 ஆகியன தற்போது தூத்துக்குடி மாவட்ட நலக்குழு என்ற பெயரில் உள்ளதனை ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி என்ற பெயருக்கு மாற்றம் செய்திட இசைவு அளிக்கப்பட்டுள்ளது.<br>4) மாநகராட்சி நிர்வாகமானது மேற்படி பூங்காவினை பராமரிப்பதற்கு எடுத்துக்கொண்ட பின்னர், இப்பூங்காவிற்கு தேவையான பராமரிப்பு பணிகள், சீரமைத்தல் மற்றும் புதுப்பித்தல் உள்ளிட்ட பணிகளை மாநகராட்சி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>5) மேற்படி பூங்காவின் கட்டுமான அமைப்பில் மாறுதல்கள் செய்ய வேண்டுமெனில் இதற்கான அனுமதியினை கடற்கரை மேலாண்மை மண்டலத்தில் அனுமதி பெற்று மேற்கொள்ள இசைவு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>6) மேற்படி மாநகராட்சி நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்படும் பராமரிப்பு செலவினங்களை ஓரளவிற்கு ஈடு செய்வதற்கு ஏதுவாக உரிய விளம்பரங்கள் செய்து கொள்ள (leverage on Advertising) அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>இதன்படி மேற்படி பூங்கா அமையப் பெற்றுள்ள இடம் தொடர்பான உரிமம் ஏதும் கோராமல் மாநகராட்சி பராமரிப்புக்கு எடுத்துக்கொண்டு தேவையான மேம்பாட்டு பணிகளை செய்து பொது மக்களுக்கு தேவையான வசதிகளுடன் செயல்படுத்தி அனுமதிக்கப்பட்டுள்ளது. மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>(1) மேற்படி மாவட்ட ஆட்சியர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை ஏற்று இப்பூங்காவினை தொடர்பராமரிப்புக்கு மாநகராட்சி நிர்வாகம் எடுத்துக்கொள்ளலாம்.<br>(2) இப்பூங்காவின் மூலம் கிடைக்கப் பெறும் வருவாயில் 50 சதவீதம் மாவட்ட நிர்வாகமும் 50 சதவீதம் மாநகராட்சி நிர்வாகமும் பகிர்ந்து கொள்ளவும் ஒப்புதல் வழங்கலாம்.<br>எப்1/1049/2018 | |
| | 4) தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாகவும் போக்குவரத்திற்கு இடையூறாகவும் சுற்றித்திரியும் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணி மாமன்ற அனுமதி பெற்று ஏற்கனவே நடந்து முடிவடைந்துள்ளது. இந்த நிலையில் மேலும் இப்பணியினை தீவிரமாக மேற்கொண்டு மாநகரில் தெரு நாய்களை கட்டுப்படுத்தும் விதமாக தொடர்ச்சியாக நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணியினை செய்வதற்கு அனுமதியும், மேலும் | 157)<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | இப்பணியினை இதற்கு முன்பு பார்த்து வந்த மெசர்ஸ் ராஜேஸ்வரி கோசலா டிரஸ்ட் என்ற நிறுவனத்திடம் மேற்கொள்ள அனுமதியும், அதற்காகும் செலவுத்தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்துசெலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எச்2/11648/10 | |
| | 5) தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் 2015ஆம் ஆண்டு வெள்ளத்தினால் ஏற்பட்டபாதிப்புகளை கருத்திற்கொண்டு மழைவெள்ள நீரை வெளியேற்ற ஏதுவாக மாநகராட்சி பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் திட்டத்தினை தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை விதி 110இன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 29.08.2017இல் தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணி ரூ.73.06 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என அறிவிப்பு செய்யப்பட்டது.<br><br>அதன் பேரில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மா,ந6) அரசாணை (டி) எண்.6 நாள் 23.01.2018இல் தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணியினை உலக வங்கி நிதி ஆதாரத்துடன் கடன் மற்றும் மான்யம், உள்ளாட்சி பங்கு தொகையுடன் முதல் கட்டமாக பணிகளை செயல்படுத்த ரூ. 96.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணையிட்டு உத்தரவு பிறப்பித்துள்ளது.<br>மேற்கண்ட மழைநீர் வடிகால் கட்டும் பணிகள் 6 சிப்பங்களாக பிரித்து பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதில் தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை எண். 9592/2017/டிஓ1, நாள் 20.04.2018இன்படி சிப்பம் எண் 1 மற்றும் 5 நீங்கலாக பின்வரும் பட்டியலில் கண்டுள்ளவாறு ரூ 42.15 கோடி மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு 01.10.2018இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. . | 158) பதிவு செய்யப்பட்டது. |

| வ.எண். | சிப்பம் எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடி) |
|---|---|---|---|
| 1 | 2 | காலாங்கரை, கழுகுபாதை, கழுதை பாதை ஓடை முதல் சி.வ. குளம் வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 12.20 |
| 2 | 3 | சி.வ.குளம் மறு சீரமைப்பு செய்தல், முள்ளிக்குளம் மேம்படுத்துதல் பணி மற்றும் அதனை சார்ந்த பணிகள் | 11.50 |
| 3 | 4 | சி.வ.குளம் முதல் மீளவிட்டான் சாலை வழியாக மழைநீர் கட்டும் பணி மற்றும் அதனை சார்ந்த பணிகள் | 11.60 |
| 4 | 6 | முள்ளக்காடு ஓடையில் வடிகால் கட்டும் பணி | 6.85 |
| | | **மொத்தம்** | **42.15** |

| | | |
|---|---|---|
| | மேற்கண்ட பணிகளில் சிப்பம் எண்.1 மற்றும் 5 க்கான பணிகளுக்கு NH-45B மற்றும் NH-7A ஆகிய இருபகுதிகளிலும் இந்திய தேசிய நெடுஞ்சாலைதுறை அனுமதி பெற்று மேற்கொள்ள வேண்டியுள்ளதால் | |

| | | | |
|---|---|---|---|
| | திருத்திய மதிப்பீடு தேசிய நெடுஞ்சாலை தரத்தில் பணிகளை RCC closed rectangular drain with RCC cover slab வுடன் அமைக்க இந்திய தேசிய நெடுஞ்சாலைத்துறை, மதுரை அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற உயர்மட்ட அலுவலர்கள் கூட்டம் நாள் 23.02.2018இல் முடிவு செய்யப்பட்டு பின்வரும் பட்டியலில் கண்டுள்ளவாறு திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. | | |
| வ.எண் | சிப்பம் எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடி) |
| 1 | 1 | காலாங்கரை ஓடை முதல் பெரியபள்ளம் ஓடை வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மற்றும் அதனை சார்ந்த பணிகள் (NH/45B) | 69.66 |
| 2 | 5 | செங்குளம் ஓடை முதல் உப்பாறு ஆறு வரை வடிகால் கட்டும் பணி (NH-7A) | 63.87 |
| | மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கான திருத்திய மதிப்பீட்டிற்கு ஸ்மார்ட் சிட்டி 4வது உயர்மட்ட திட்ட அனுமதி குழு நடவடிக்கை நாள் 14.08.2018 மற்றும் மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனம் லிமிட், கடிதம் எண். TUFIDCO/AM(M) 4th HPPSC நாள் 29.08.2018இல் ஒப்புதல் அளித்துள்ளது.<br><br>எனவே 14.08.2018ஆம் தேதிய ஸ்மார்ட்சிட்டி 4வது உயர்மட்ட திட்ட அனுமதி குழு கூட்ட நடவடிக்கை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** மாமன்ற பதிவு செய்யலாம்<br>இ1/3209/2015/SWD | | |
| | 6)இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும்–ஸ்மார்ட் சிட்டி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் பக்கிள் ஓடையில் கழிவுநீருடன் குப்பைகள் கலந்து செல்வதை தடுக்கும் பொருட்டு குப்பைகளை தடுப்பு அமைக்கும் பணிக்காக ரூ 2350000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்காக 28.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப கமிட்டியால் தேர்வு செய்யப்பட்டு இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 28.08.2018 அன்று திறக்கப்பட்டது.<br>1) திரு. K. Muthuraman<br>மதிப்பீட்டை விட 1.43% குறைவு (ரூ.1 9,95,000.00)<br>2) M/s. Alpha MERS Private Limited<br>மதிப்பீட்டை விட 15.71% அதிகம் (ரூ. 23,41,900.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையினை விட குறைவான தொகை குறிப்பிட்டு கொடுத்துள்ள திரு. K. Muthuraman என்பவரின் (மதிப்பீட்டை விட 1.43 % குறைவு (ரூ.1 9,95,000.00) ஒப்பந்தப்புள்ளியை | | 159) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மதிப்பீட்டை விட 1.43% குறைவாக கொடுத்த திரு. K. Muthuraman ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>E1/3209/2015 (BS) (7) | |
| | 7) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும்–ஸ்மார்ட் சிட்டி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் உள்ள முத்துநகர் கடற்கரை பூங்கா ரோச் பூங்கா இராஜாஜி பூங்கா மற்றும் எம்.ஜி.ஆர். பூங்கா ஆகியவற்றில் திறவிட உடற்பயிற்சி கூடம் நிறுவி, உடற்பயிற்சி சாதனங்கள் வாங்கும் வகைக்காக ரூ 3550000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்காக 28.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப கமிட்டியால் தேர்வு செய்யப்பட்டு இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 28.08.2018 அன்று திறக்கப்பட்டது.<br>1) திரு. T. Murugan<br>மதிப்பீட்டை விட 1.70% குறைவு (ரூ.34,14,860.00)<br>2) திரு. P. Jefferson Samuelraj<br>மதிப்பீட்டை விட 9.78% அதிகம் (ரூ. 37,75,043.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையினை விட குறைவான தொகை குறிப்பிட்டு கொடுத்துள்ள திரு. T. Murugan என்பவரின் (மதிப்பீட்டை விட 0.70 % குறைவு (ரூ.34,14,860.00) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மதிப்பீட்டை விட 0.70% குறைவாக கொடுத்த திரு. T. Murugan ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>E1/3209/2015 (Gym) (9) | 160) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள். 26.9.2018